**Rates**

*Subscription:* Rs. 6 per year. (including postage)

Single copy: 15 cts. (including postage)

*Advertisement:* On application.

*'In Memoriam':* (within 4 inches) Rs. 5 per insertion.

*'Order Nisi':* Rs. 3 per insertion.

# THE MORNING STAR

JAFFNA COLLEGE JUN 18 1945 VADDUKODDAI, CEYLON.

**Notice**

Please send all editorial correspondence as well as all business matters to Tellippalai. This will ensure prompt attention.

Registered as a Newspaper ( Established 1841 ) Published every Friday

VOL. 105 | JAFFNA, FRIDAY, JUNE 15, 1945 | NO. 23.

RIGHTEOUSNESS EXALTETH A NATION, BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.

## NEWS

### LOCAL

### St. Peter's Wesley Guild

At the literary meeting of the Wesley Guild held on the 7th inst. with Mr. J. K. Thambyrajah in the chair. Mr. Isaac Ponnambalam, B. A. (Hons). of the tutorial staff of Jaffna Central College spoke on "Guerilla Warfare in Soviet Russia." Mr. M. S. Nathan proposed a vote of thanks to the speaker.

### Minority Tamil's Request to the Governor

That section 4 of the Thesavalamai Ordinance should not find a place in the Statute Books of any civilised country, much less should it in those of His Majesty's premier Crown Colony was one of the submissions contained in the address presented to His Excellency at King's House, Jaffna by the All Ceylon Minority Tamils Maha Sabha. The section referred to reads: "All questions that relate to those rights and privileges subsist in the said province between the higher castes especially the vellalas on the one hand and the lower castes especially the Covias, Nallavas and Pallas on the other, shall be decided according to the said customs and the ancient usages of the province."

### Water Board for Ceylon.

There was the likelihood of Water Boards being formed for all towns, said Mr. E. W. Kannangara, Commissioner of Local Government, speaking at a special meeting of the Jaffna Urban Council. at which Mr. C. Ponnambalam, Chairman, presided.

Messrs. E. W. Kannangara and M. E. Fonseka, Accountant, Local Government, were present.

The report on the reorganisation of the Urban Council Office prepared by Mr. M. E. Fonseka was adopted with modifications.

The Chairman stressed the importance of the clearance of the Karayur Slum area by erecting model houses and including it in the post-war reconstruction scheme rather than clearing it piecemeal.

Mr. Kannangara agreed and said that could be done without much difficulty.

The Chairman next said that the Jaffna water supply scheme was already sanctioned and should receive priority.

Mr. Kannangara then made the remark quoted above.

It was suggested at the meeting that Jaffna had not received any grant from the Central Government for wastage of roads by military traffic.

### Death of ex-Principal of Chundikuli.

News has been received of the death of Miss S. L. Page, Principal of Chundikuli Girls' College from 1903-1931 in her home in Weston-Super-Mare, Sommerset, England, on Saturday, 26th of May. A Memorial Service is to be held on the 4th of July at 7 p. m. at St. John's Church.

### Personal

Misses Sarojini Thomas and Thilagam Mather of the Women's Christian College, Madras, have been successful in the intermediate examination of the Madras University.

### INDIAN

The Working Committee of the All-India Students' Federation is in sessions in Bombay from June 10. The Agenda includes the discussion, among other subjects, problems of student life, students' unity and the World Youth Congress.

—It is learnt that Allahabad University will open in July a special B. sc. course to train women to run their homes on modern scientific principles.

—The 24th Annual Session of the South Travancore Christian Young Men's Retreat was held In the Old Rest House, Cape Comorin recently. It was attended by 52 members from different parts of S. Travancore. At the opening meeting Rev. J. A. Jacob, the President, welcomed the members. The Retreat, which was the outcome of a spontaneous movement among the young, has been held every year without a break for the last 21 years.

### New Bishop of Dornakal

The Rt. Rev. A. B. Elliot, Assistant Bishop has now been appointed as the Bishop, of Dornakal. Chosen by the Diocese, the appointment was made by the Metropolitan.

### The Kodaikanal Centenary.

The Kodaikanal first centenary commemorating the arrival at Kodaikanal of the first six families of American Missionaries was celebrated recently. An Exhibition of old pictures, paintings and albums depicting the life in Kodaikanal and the surrounding areas in early days was arranged.

The centenary gift to Kodaikanal was to take the form of a Clock Tower to be erected from the sale proceeds of a booklet specially prepared for the event giving the history of Kodaikanal, and from contributions from the Municipality and the public.

### FOREIGN

### "Cyclopaedic History of Literature"

A huge scholarly project to prepare a "cyclopaedic history of literature" containing a series of surveys of living literatures of the world has been undertaken by several professors of U. S. A. under the general editorship of Mr. Joseph. T. Shipley an eminent American scholar. The work is to be published by the American *Bookman*, an American quarterly of literary theory and criticism. With a view to obtaining authoritative contributions, the Editors have invited scholars of different countries to contribute articles on literatures of their own country.

It is learnt that the Indian Literatures Section of the Cyclopaedia will contain 31 different contributions dealing with Vedic literature, epics and Puranas, Sanscrit poetry, drama and romance, Pali and Buddhist literatures, and literatures in all the modern Indian languages, and will total over two lakhs of words.

## IN LIGHTER VEIN

### THE LIVING SHIP

Japanese losses at sea will probably be attended by rites peculiar to Japan. The Japanese believe that their ships have souls which survive the ships themselves. Expression of their belief took unique form fourteen years ago when a meeting of Japanese ship- owners attended before the Buddhist high priest at Osaka so that he might offer prayers for the souls of their ships that had been destroyed within the preceding eight years.

Deep as is the British loathing of the cruel and treacherous Japanese, British soldiers will be the last to mock at this astonishing ceremony. For the British sailor has always attributed to his ship a consciousness and personality of her own. British seamen see nothing absurd in Kipling's lines "The Liner She's a lady ... the Man-O-War's 'er 'us band", and all who have read Conrad's sea stories, will recall vivid phrases in which he gives a ship its own distinctive individuality.

Southey, the poet, tells how in his day with the wars against Napoleon in progress, brave but superstitious sailors credited their craft with feelings declaring that an English vessel always sailed faster in pursuit of a Frenchman than at any other time. An example cited is that of a certain Captain Adkins who at such a time would talk to his ship like an Arab to his horse, urging and entreating her to exert herself and put forth all her speed and promising to reward her with a new coat of paint as soon as they reached harbour victorious..

### THEIR CODE

The smugglers in the Dhanushkodi border of the Indo-Ceylon route have, it is learnt, code words for their private use.

Things are smuggled through the sea with the aid of a rope attached to sailing vessels and actual things being allowed to remain under water. This method of smuggling is known amongst smugglers as "submarine".

Then it is stated that along with the mail bags smuggled things are sometimes thrown from the shore to the sailing boat and this method is known as "aeroplane!"

Thirdly, gold appears to be smuggled through capsules swallowed by smugglers and this is described as the "torpedo!"

### ORDER NISI

In the District Court of Jaffna

In the matter of the estate of the late Nagamuthu Ponnambalam of Colombogam. Deceased.

Ratnam widow of Ponnambalam of Manipay.

(Contd. Over)

No. 321 Testy.

1. Thyavathi.
2. Thyananthan.
3. Pathmanathan and
4. Pathmavathi, minor children of Ponnambalam appearing by their guardian ad-litem.
5. Sinnathamber Sivapathasundram all of Manipay. Respondents.

This matter coming on for disposal before H. A. de Silva Esquire, District Judge of Jaffna on the 6th day of March 1945 in the presence of Mr. J. F. Ponnambalam, Proctor, on the part of the Petitioner and the Petition and affidavit of the petitioner abovenamed dated 5th March 1945 having been read: It is ordered that the 5th Respondent abovenamed be appointed guardian-ad litem over the abovenamed first four minor Respondents for the purposes of these proceedings and that the Petitioner abovenamed as the widow of the abovenamed deceased be granted Letters of Administration to the abovenamed estate unless the respondents or any other person or persons interested shall on or before 27th June. 1945 show sufficient cause to the contrary.

Sgd. S J. C. Shockman,
District Judge.

Drawn by
Sgd. J, F. Ponnambalam,
Proctor for Petitioner,
23-2.

### UDUVIL OLD GIRLS' RE-UNION

The 24th Annual Celebrations of the Uduvil Old Girls' Association will be held at Uduvil on Saturday the 30th of June.

Old Boys, Husbands of Old Girls and Friends are cordially invited to tea, the public meeting and the entertainment.

Kindly keep this day Free.
No individual invitations.

PROGRAMME

| | |
|---|---|
| 10 a. m. | Praise Service. |
| 11 a. m. | Demonstrations of school activities. |
| 1 p. m. | Lunch. |
| 3 p. m. | Business Meeting |
| 4,30 p. m | Tea. |
| 5.30 p. m. | Public Meeting. |
| 6.30 p. m. | Entertainment. |

R. Suppiah,
Secy., U. O. G. A.

### DISTRIBUTION OF SUBSIDIARY FOODSTUFFS

The undermentioned commodities will be issued in the Jaffna District to all consumers except those served by Co-operative stores on the basis of the rations given below for period 21-5-45 to 17-6-45:-

| | |
|---|---|
| Khasaly Dhal | 6 ozs. |
| Gram Dhall | 6 ozs. |
| Toor Dhall | 2 ozs. |
| Green Gram | 2 ozs. |
| Green split peas | 1 oz. |
| Corriander | $\frac{3}{4}$ oz. |
| Methe seed | $\frac{1}{2}$ oz. |
| Cummin seed | $\frac{1}{4}$ oz. |
| Fennel seed | $\frac{1}{4}$ oz. |
| Tamarind | 2 ozs. |

Sgd. E. Gunaratne,
Asst. Govt Agent (E),
Jaffna.

Jaffna,
6th June 1945.

TO BE RELEASED SHORTLY!

**"DRAVIDA"**

A history of the Dravidian Race from the Mohenjo-Daro period to the British period, with Maps and Illustrations

BY E. L. TAMBIMUTTU.

FOREWORD BY K. A. NILAKANTA SASTRI, M. A., Professor of Archaelogy and History, Madras University.

"The author deserves a word of thanks......this is the first book I have seen which seeks to satisfy a want that has been felt for some years."—PROF. NILAKANTA SASTRI.

"It is a clear and succinct account of the history of the Tamil race......"—REV. FR. GNANA PRAGASAR, O. M. I.

*Advance Bookings at Rs. 4 per copy: (Postage cts. 25).*

GENERAL PUBLISHERS LTD.,
20, Parson's Road, Fort, Colombo. P. O. Box 305

**THE SHOP FOR THE BEST BOOKS**

General and Regional Geography by *Unstead and Taylor.*
Geography of Ceylon by *E. K. Cook.*
Introduction to Tropical Botany by *M. J. Legog.*
Light and Sound by *Stewart.*
Heat, Light, Sound and Magnetism and Electricity by *Mackenzie.*
A Class Book of Physical Chemistry by *Lawry and Sugden.*
Introduction to Organic Chemistry by *E. J. Holmyard.*
Higher Algebra by *Hall and Knight.*
Pitman's Shorthand New Era Edition.

**THE C. L. S. BOOK SHOP,**
First Cross Street, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும்; பாவமோ எந்தச்சனங்களுக்கும் இகழ்ச்சி.

# புதினக் குறிப்புகள்

### காலநிலை

இலங்கையின் பல பாகங்களிலும் மழை பெய்திருக்கின்றது. இரத்தினபுரி, அவிசாவலை, ஹாற்றன், லயிகாம, மஸ்கேலியா முதலிய இடங்களிலே இரண்டு அங்குலத்துக்கு மேற்பட மழைபெய்திருக்கின்றது. யாழ்ப்பாணத்துக்கு மழையில்லை. ஆனால் சோழகம் அதிக மும்முரமாய் வீசுகின்றது.

### புகையிரதப் படிகளிற் பயணஞ்செய்வோருக்கு அபராதம்

புகையிரதப் படிகளிற் பயணஞ்செய்த 26 கூலியாட்களுக்கு ஆளுக்குப் பத்து ரூபாவீதம் அபராதம் விதிக்கப்பட்டிருக்கின்றது.

### கொழும்பு பாறின மரங்களின் நகரம்

சென்றுபோன எட்டாந் திகதி இரா எழும்பின காற்றும் இடிமுழக்கங்களும் காரணமாகக் கொழும்புப் பட்டணம் பாறி விழுந்த மரங்களுள்ள இடமும், பாழாய்ப்போன வீடுகளுள்ள இடமுமாயிற்று. வீடுகள விழுந்ததினபேருய்ச் சனங்கள் மழையில் நனையவேண்டியவராயினர். இந்த மரங்கள் வீதிகளிலும், தளங்களிலும் குறுக்குமறுக்குமாய் விழுந்து கிடந்தன. வெள்ளென ஒரு கூட்டமான வேலையாட்கள் வழிகளைச் செவ்வைப்படுத்தித் தந்திக் கம்பிகளையெல்லாஞ் செவ்வையாக்கிவிட்டனர்.

### எச்சரிக்கை — ஓர் சிறுமாரி வரும்

களனிகங்கை நகலகம் என்ற இடத்தில் நாலு அடி மூன்று அங்குலம் உயர்ந்துவிட்டது. அடுத்த இரவுக்குத் தண்ணீர் ஐந்து அடிக்கு உயரத்தக்கதாகவோர் சிறு மாரி வரக்கூடுமெனச் சாத்திரமுஞ் சொல்லப்பட்டதாம். இதனால் கொழும்புப் பட்டணத்துக்கு வந்த தண்ணீர்ப் பஞ்சம தீர்ந்துவிட்டது.

### விவாகம்

கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த ஆலயத்திலே இந்த மாசம் 11 ம் திகதி பிற்பகல் 4 மணிபோல ஓர் கிறிஸ்த விவாகம் நிறைவேற்றப்பட்டது. மணமகன் காலஞ்சென்றுபோன திரு. Wm. யோன் என்பவரின் ஒரே புத்திரனும், பெரிய ஆஸ்பத்திரியில் வைத்தியர்களிலொருவருமாயிருக்கிற Dr. S. J. ஜெபசுந்தரம். மணவாட்டி டிஸ்திறிக் நீதிபதியாயிருந்து இளைப்பாறியிருக்கும் திரு. T. குரூசெற் தம்பையாவின் புத்திரியும், கலைமாணியுமாகிய கமலாவதி. விவாக வைபவங்களெல்லாம் அதி சிறப்பாயும் கோலாகலமாயும் நடைபெற்றது. தம்பதிசன் எம்பிரானருள்பெற்று நீடூழி வாழ்க.

### இந்திய அரசியல் நெருக்கடி

இந்திய அரசியற் கஷ்டங்களை நீக்கும் பொருட்டு உவேவெல் பிரபு கொண்டுவந்திருக்கும் திட்டம் இந்த மாசம் 13 ம் அல்லது 14 ம் தேதியிலே புதிய டெல்கியிலும், ஆங்கிலேய பார்ளிமெந்திலும் ஏககாலத்தில் வெளிபபடும். உவேவெல் பிரபு இத்திட்டத்தைப்பற்றி Coalition அரசாங்கத்தோடும், சேர்ச்சிலுடையபுதிய அரசாங்கத்தோடும் கலந்துபேசியிருக்கின்றார்.

### யுத்தப் புதினங்கள்

போர்னியோச் கரைக்கப்பாலுள்ள லபுவான் என்னுந் தீவில் ஐக்கியகட்சியார் இறங்கிவிட்டார்கள்.

சீனச் சைனியம் ஓீந்துசீனக் கரையை அடைந்துவிட்டனர்.

அட்மிறல் நிமிற்சின் அறிவித்தலின்படி 67 யப்பானிய Suicide விமானங்கள் சுட்டுவிழுத்தப்பட்டன. ஒக்கினுவாவுக்கு கிட்டவிருந்த அமெரிக்க கப்பல்களை மேற்படி விமானங்கள் தாக்கப்போயின. இரண்டு சிறு அமெரிக்க கப்பல்கள் ஆழ்த்தப்பட்டுப்போயின.

—ஷான் இராச்சியத்திலுள்ள மலைப்பிரதேசங்கள் இரண்டு ஐக்கியகட்சியாரால் கைப்பற்றப்பட்டன.

—யுத்தந் தொடங்கிய காலம் முதல் இதுவரை அத்திலாந்திக சமுத்திரத்தில் 700 க்கு மேற்பட்ட U-Boats ஐக்கியகட்சியாரால் ஆழ்த்தப்பட்டனவென ஜனாதிபதி ருறூமன், பிரதமமந்திரி சேர்ச்சில் என்பவர்களினதுகாரத்தோடு இப்புதினம் வெளிவந்திருக்கின்றது பேலும் அவர்கள் சொல்லுவது: அப்படிப்பட்ட ஆமைக் கப்பலின் தொல்லை முழுவதுந் தொலைக்கப்பட்டாயிற்று என்பது.

### ஹிட்லரைப்பற்றிய புதினம்

ஹிட்லர் சாகவில்லையென்றும், பெர்ளின் நகரம் பிடிபட இரண்டு நாட்களுக்கு முன்னே [illegible] யாகிய நவா புறோன் என்பவளை விவாகஞ் செய்திருக்கிறாரென்றும் மாரிஷல் ஷுக்கோவ் ஐக்கியகட்சியாருக்குச் செய்தியனுப்பியிருக்கின்றார். ஹிட்லருடைய மாய மறைவைக் குறித்தும், அவரது கதியைக்குறித்தும் நான் ஒன்றுங் கிட்டமாய்ச் சொல்ல அறியேன். ஹிட்லருடைய பிரேதந்தான் எனத் திட்டமாய்ச் சொல்லக்கூடியதான ஒரு சரீரத்தையும் நான் காணவில்லை. ஹிட்லர் ஐரோப்பாவிலே எங்கேயோ மறைந்திருக்கிறாரென்றும், அவர் பிறுங் கோவுடன்தான் இருக்கவேண்டுமெனவும் எண்ணப்படுகின்றது.

### ஒக்கினுவா வீழ்ந்தது

ஒக்கினுவாவிலேதான் தங்கள் தேசத்தின் தற்காப்புத் தங்கியிருக்கின்றதெனச் சொல்லிக்கொண்டுவந்த யப்பானியர் அத்தீவு ஐக்கியகட்சியாரின் வசமாயிற்றென்பதை ஒத்துக்கொண்டு, தங்கள் தாய்நாடு ஒகினுவாவிற் தங்கியிருக்கவில்லையெனச் சொல்லத் தொடங்கிவிட்டனர்.

### யப்பானிய விமானத் தொழிற்சாலை

100 க்கும் 150 க்கும் மேற்பட்ட Super Fords யப்பானிய விமானத் தொழிற்சாலைகளாகிய நாகோயா, மாறுவோ, அகாஷி என்னப்பட்டவிடங்கள் தாக்கப்பட்டன. அகாஷி என்பது கோபிவிலிருந்து 12 மைல் தூரத்திலுள்ளது. அதி விசேஷித்த தொழிற்சாலை.

### பார்ளிமெந்து வீடுகள்

சென்ற யுத்தகாலத்திற் பார்ளிமெந்து கூடுகிற வீடுகள் 12 முறை சத்துருவின் விமானத்தாற் தாக்குற்றன. அதைவிட இரு Aircraft Shells (British) வெடித்து, Big Ben ஐத் தாக்கினது. மற்றது இராசமாளிகையைத் தாக்கினது.

### சன்பிறன்சிஸ்கோ ஆலோசனை

இந்த மாசம் 11 ம் திகதி முதல் இன்னும் பத்துநாளைக்குட் சன்பிறன்சிஸ்கோ ஆலோசனைகள் முடிவுக்கு வந்துவிடும். ரத்து அதிகாரத் தொல்லையின் மொஸ்கோ விட்டுக்கொடுத்தது எஞ்சியிருக்குங் கஷ்டங்களெல்லாம் வல்லரசுகளுக்கிடையில் சரிவரக்கூடுமென எண்ணப்படுகின்றது. ஏப்பிறில் மாசம் 25 ம் திகதி தொடங்கிய இக்த ஆலோசனைக் கூட்டத்தில் ரத்து அதிகாரத் தொல்லையினால் இவ்வளவு காலஞ் சென்றதும், அதிக கஷ்டமான தார்க்கீக விஷயமானதினால் மனதுக்கு அதிக பாரமாயிருந்ததும் தற்போது ஒருவகையாய் நீங்கிவிட்டதினால் பிரதிநிதிகள் மன ஆறுதலுடையராய்த் தங்கள் தங்கள் நாடுகளுக்கேகத் தயாராகின்றனர். எல்லோரும் சாதனத்துக்கு ஒப்பம்வைத்தவுடன்தான் புறப்படுவார்கள்.

### வெற்றிப் பவனி

இறங்கூனிலே ஐக்கியகட்சியாரடைந்த வெற்றியின்பேருய் இறங்கூனிலே வரும் 15 ந் திகதி ஷுவாடக்கோன் எனும் புத்த ஆலயத்துக்கணித்தாய் இந்த வெற்றிப் பவனி நடைபெறும்.

—யப்பானிய பிரதம மந்திரியாகிய சுஜூக்கி என்பவர் யப்பானிய மந்திராலோசனைச் சபை கூடியபோது: "அமெரிக்கருக்கும், யப்பானியராகிய எங்களுக்குமிடையில் யுத்தம் நேர்ந்தது அதிக விசனத்துக்குரியவோர் விஷயம்" எனச் சொல்லியிருக்கின்றார். மேலும் அவர் சொன்னது: "தங்களுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென ஐக்கியகட்சியார் எங்களைக் கேட்டால், அதின் கருத்தென்னவெனில், எங்களைப் பாதுகாக்கும்படி கடைசிவரை போர்புரியுங்கள்" என்று சொல்லுவது போலாகும்.

### யுத்தக் குற்றவாளிகளின் விசாரணைச் சபை

றைத் பிரபுவைத் தலைமையாகக் கொண்டவோர் யுத்தக் குற்றவாளிகளின் விசாரணைச் சபை ஐக்கியகட்சியாரால் அனுப்பப்பட்டுத் தற்போது பிரான்சிற் சோகு, பிரான்சிய நாஷனல் அதிகாரிகளுடனும், பிரித்தானிய, அமெரிக்க யுத்த அதிகாரிகளுடனும், கலந்து ஆலோசனை செய்கின்றனர். இந்த விசாரணைச் சபை பல அதிகாரிகளுடனுஞ்சேர்ந்து ஒருமித்து ஆலோசனை செய்து, குற்றவாளிகளை விசாரணை செய்வதற்கே முயற்சிக்கின்றது.

---

## பணமும் கிறிஸ்துமார்க்கமும்

( க. பே. முத்தையா )

(தொடர்ச்சி)

முதலாவது வழி ஐசுவரிய சம்பன்னராகிய இறைவனிடம் பணத்தை வா[illegible] மத்துக்கு வரையறுக்கப்படாத வங்கி ஒன்று (Unlimited Bank) பரலோகத்தில் இருக்கிறதென்றும் அங்கிருந்து போதிய அளவு பணம் கிடைக்கிறதெனவும் பெரியண்ணன் கூறுகிறார். அநேக சாட்சிகள் நமக்குளளேயும் உண்டல்லவா? பருத்தித்துறையிலே ஒரு கிறிஸ்தவ குடும்பம். பிச்சம்பிடித்துவைக்கப் பணமில்லை. இவர்கள் ஏழைகளுமல்ல. ஐசுவரியவான்களுமல்ல. அன்றாடன்று பெற்று வாழ்கிறவர்கள் ஒருநாள் மத்தியானம் பிள்ளைகள் பாடசாலையில். தந்தை வெளிவிறாந்தையில். மாதா அடுக்களையில். சோறு சமைத்தாயிற்று. கறி சமைக்கப் பொருள் இல்லை. பொருள் வாங்கப் பணம் இல்லை. மனைவி கணவனுக்குக் கூறினாள். பிள்ளைகள் பாடசாலையிலிருந்து வரப்போகிறார்கள் என்செய்வது என்கிறாள் மனைவி. இருவரும் செபிக்கிறார்கள். முற்றத்திலே ஒரு மரம். அந்த மரத்தில் ஒரு காகம் வந்து உட்கார்ந்தது. பொத்தென்று எதையோ போட்டது. கணவன் எடுத்துவந்து மனைவிக்குக் காட்டினார். அது என்ன? பணம்! துதித்தார்கள். பொருள் வாங்கினார்கள். சமைத்தார்கள். பிள்ளைகட்கும் கூறினார்கள். உண்டார்கள். இது உபகதையல்ல. அந்தக் குடும்பம் இன்றைக்கும் அங்கே இருக்கிறது. அதே பழக்கத்தில் மேலே அண்ணார்ந்து பார்த்து வரையறுக்கப்படாத வங்கியிலிருந்து இடையிடையே பணம் பெற்றுப் பெற்று வாழ்கிறார்கள்! இப்படி ஏராளமான சாட்சிகள் உண்டு. அழிந்துபோகிற வயிற்றுக்காகக் காகத்துக்குக் கட்டளையிட்ட எலியாவின் தெய்வம் தமது நாம மகிமைக்கான வழிபங்கட்காகக் கட்டளையிடமாட்டாரா? சபை சபையாக, குடும்பம் குடும்பமாக விசுவாசத்தோடு கூடியிருந்து இறைவனுடன் மணிக்கணக்காகப் போராடாத குறையினாலேயே பணம் இல்லை. பக்க வழிகளும் பட்டுப் பைகளும் ஆட்சிசெய்கின்றன. இதை விசுவாசியாத நாம் பணம் சேர்க்கப் படும் பாடு! ஐயையோ! கையாலே கிழிக்கும் பலாங்கிழங்குக்கு ஆப்பும் வல்லீட்டுக் குத்தியும் தேடின கதை போலல்லவா இருக்கிறது. எலியாவின் தேவன் ஐசுவரிய சம்பன்னராக அன்றைக்கிருந்த பிரகாரமாகவே இன்றைக்கும் இருக்கிறார். உயிரோடிருக்கிறார். அல்லேலூயா! என்று கூறுவோமாக! இது முதலாவது வழி! சுலபமான சிறந்த வழி! இதற்கு நீங்களே சாட்சி கூறுவீர்கள்;

இரண்டாவது வழி பணம் கொடுக்கும் மனுஷ இருதயங்கள் தேவ அன்பின் அனலில் பரவசப்படவேண்டும். இந்த அன்புக்கு நேராக சனங்களை வழி நடத்தவேண்டும். பணம் சேர்க்க எடுக்கும் நேரத்தில் அரைவாசியை இதிற் செலவிட்டால் போதும். பணம் சேர்க்க எடுக்கும் முயற்சியில் அரைவாசியை இதிற் செலவிட்டால் போதும். நாம் வலிந்து சேர்ப்பதிலும் கூடிய பணம் வந்து சேரும். எருசலேம் தேவாலயத்தில் ஒருநாள் ஆண்டவர் இரண்டு காட்சிகள் கண்டார். சனங்கள் காணிக்கை போட்டார்கள். ஐசுவரியவான்கள் ஏராளமாகப் போட்டார்கள். ஒரு விதவை இரண்டுதுட்டைப் போட்டாள். உடனே இறைவன் விதவையை வியந்தார், ஏன்? ஐசுவரியவான்கள் தங்கள் வீடுகளில் பணத்தை வைத்துவிட்டு வந்தார்கள். இவளோ அங்கே. மீதி ஒன்றும் வையாமல் முழுவதையும் போட்டுவிட்டாள். அன்புக்குக் கண்ணில்லை, என்கிறது ஒரு ஆங்கில பழமொழி, ஆனால் அன்புக்குக் கணக்கில்லை, என்று அதைத் திருத்துவோம். அன்பு ஒருநாளும் பணத்தைக் கணக்கிட்டுப் பார்த்து எண்ணிப்பார்த்துக் கொடுக்கமாட்டாது. நாம் கர்த்தருக்குப் பத்திலொன்றைக் கொடுக்கும்போது அவர் அந்தப் பத்திலொன்றைக் கவனியாமல் வீட்டில் இருக்கும் பத்தில் ஒன்பதையே கவனிக்கிறார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. வீட்டில் இருப்பதை நாம் எப்படிப் பரிசுத்தமாகச் செலவழிக்கிறோம், என்பதிலேயே நாம் கொடுக்கும் காணிக்கையின் பலன் தங்கியிருக்கிறது. பட்டுப்பைக்குள் ஒருசதம் போடுவது வீணானவேலை என்று இப்போது விளங்குகிறதா? அந்த ஏழை விதவையின் அன்பின் பரவசம் நமக்கு வருமானால் சட்டைப் பைக்குள் தடவும் நமது கையில் சந்தித்த நாணயம் வருமேயன்றி ஒரு சதத்தை தூக்கிப் பிடிப்போமா? பத்திலொன்று கொடுக்கமாட்டோமா? ஆலயம் வியாபார வீடாகுமா? ஆராதனை நேரத்தில் பைகள் கொண்டு திரியும் பழக்கம் உண்டாகுமா? காணிக்கைப் பெட்டிக்குள் ஏராளமாகப் பணம் குவியமாட்டாதா? இருதயம் அனற்படுமானால் எவ்வளவோ அற்புதங்கள் நடைபெறும். அனலிடைப்பட்ட மெழுகைப்போல இருதயம் பரவசமாகி ஈயும் பணத்தைப் பெறவேண்டிய திருச்சபை பெருமைக்கும் பலவந்தத்துக்கும் கொடுக்கும் பணத்தையும் பெறவேண்டி வந்ததேதென நாம் நினைந்துருகுவோமாக.

"என்னை நோக்கிக் கூப்பிடு. அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்." என்று கர்த்தர் கூறுகிறார்.

"உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." என்றுபரிசுத்தவான் கூறுகிறான்.

---


## 70 வருஷங்களுக்கு மேற்பட்ட அனுபவம்...



1872 ம் ஆண்டுக்கு முன் இங்கிலாந்திலே முதல் ஹம்பர் துவிச்சக்கரம் செய்யப்பட்டது. ஹம்பர் துவிச்சக்கரத்தில் சிறப்பட்ட வரிகளும், பெலனும், இலேசும் இன்று அதனுடைய நீண்ட அனுபவத்தையும் அது செய்கை பண்ணப்பட்ட திறமையையும் காட்டுகின்றது.

ஹம்பர் துவிச்சக்கரத்தின் வரத்து மட்டுப்படுத்தப்பட்டாலும் அதற்குத் தேவையான மறுபகுதிகள் கிடைப்பதனால் ஹம்பர் துவிச்சக்கரத்தை யுடையோர் தொந்தரவு இல்லாமல் அதைப் பாவிக்கலாம்.

## ஹம்பர்

[illegible] லிமிடெட், ஹம்பர் துவிச்சக்கரவண்டிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிமல்குக அன்பு பெருகுக
தேசமெங்கணுந் தீமையருகுக
பாசநீக்கிப் பவித்திரமேயருள்
யேசு நாமமே என்றென்று மோங்கவே

உதயதாரகை

1945 ம் ஞு ஜூன் மீ 15 உ

## இலவசக் கல்வி

இலவசக் கல்வியைப்பற்றிய தீர்மானம் லேசாக அரசாங்கசபையில் நிறைவேறியது. அதைப் பற்றிக் கொண்டுவரப்பட்ட திருத்தப் பிரேரணைகள் ஒன்றும் ஒப்பேறவில்லை. அது முழுவதாகவே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. கல்வி மந்திரி விரும்பியபடியே அரசாங்க சபையின் பிரேரணையாக இது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இது விலையேறப் பெற்ற வோர் பிரேரணையாயிருக்கலாம், அல்லது அரசாங்கசபையின் ஒரு பிரேரணையாகக் கால வரையறை குறிக்கப்படாமல் அது இருக்கலாம். ஆனால் இலவசக் கல்வி கொடுப்பதற்கு வேண்டிய பணம் அரசாங்கத்தில் இல்லையென்பது உண்மையிலுண்மை. அரசாங்கசபை தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லியிருப்பதினாலே திட்டமாகவும், கூடிய கெதியிலேயும் இது செய்து முடிக்கப்படுமெனவுங் கருத்தில்லை. காலத்துக்குக்கால மிருக்கும் பண வரவிலேயே இதெல்லாந் தங்கியிருக்கின்றது. இலவசக் கல்வியைக் கொடுப்பதற்கு வேண்டிய பணத்தைக் கண்டுபிடிப்பதற்குரிய ஆர்வம் நம்மிடத்தி லிருக்கிறதென்பதைப்பற்றி யார்தான் சந்தேகப்பட முடியுமென அரசாங்கசபைத் தலைவர் சொல்லியிருக்கவில்லையா? அந்த ஆர்வத்தை நிறைவேற்றுவதற்குரிய வழிவகைகளைக் கண்டுபிடிப்பது மனுஷ யுக்திக்கு மேற்பட்டதல்ல.

அடியெடுத்து வைத்தாயிற்று. ஆனால் இது கண்ணைமூடிக்கொண்டு கடலிலே பாய்ந்ததுபோலிருக்கலாம். வருங்காலத்தி லிந்த விஷயமெப்படி நடந்தேறுமென்பதைப்பற்றிச் சந்தேகங்களிருந்தபோதிலும் இலவசக் கல்வி ஓர் விசேஷித்த காரியந்தான். இலவசக் கல்வியைப்பற்றி எதிர்த்துப் பேசுவாரில்லை; நமது நாட்டின் முன்னேற்றத்தையும், புரோகதியையும், இலக்காக வைத்துக் கிரியை செய்வதற்கு இது ஏற்றவோர் காரியமென்பதைச் சந்தேகிப்பாருமில்லை. ஆனால் காரியங்களை உள்ள உள்ளபடி கவனியாமலும், பின்வருங் காரியங்களை யோசியாமலும் போனால், அரசாங்கசபைத் தலைவர் விலையேறப்பெற்ற காரியமாக நினைப்பது தனது விசேஷத்தை இழந்துவிடும். ஐவோர் ஜெனிங்ஸின் அபிப்பிராயப்படி: ஐந்து வயதுக்கும் பதினன்கு வயதுக்குமிடையிலுள்ள பிள்ளைகளெல்லாரையும் பள்ளிக்குக் கட்டாயப் பிரமாணமாய்ப் போகச் செய்வதே ஆதாரக்கல்வி சம்பந்தமாயுள்ள பெரிய கஷ்டம். நாட்டுப்புறங்களிலேயுள்ள பிள்ளைகளிற் பெரும்பாலானோர் பள்ளிக்குப் போகிறார்களேயில்லை. அப்படிப் போகிறவர்களுக்குக் கொடுக்கப்படுங் கல்வியும் அதிக எளிதானது. அக்கல்வி கடைசியில் அவர்களை கிட்சரகுட்சிகளாக்கிவிடும். கல்வி மந்திரியின் இலாகாவிலுள்ளவர்கள் ஐந்து வயதுக்கும் பதினறு வயதுக்குமிடையிலுள்ள பிள்ளைகளைக் கட்டாயமாய்ப் பள்ளிக்குப் போகச் செய்யவேண்டுமெனச் சிபாரிஸ் செய்திருந்தார்கள். ஆனால், "அரசாட்சியார் இலவசமாய்ப் புத்தகம் உடைமுதலியன கொடுத்தால்" என்றொன்றைக் கூட்டியிருப்பதினால் முந்திய பிரமாணத்தைப் பெலவீனப்படுத்தியிருக்கின்றனர். செய்யப்பட்ட சில சிபாரிசுகளைச் சில பிரமாணங்கள் அபிரயோசனமாக்கிவிடும். ஆகவே ஆரம்பக் கல்விக் கஷ்டங்கள் கஷ்டமாகவேயிருக்கும், இலவசக் கல்வி விஷயமுந் தடைபெறும்.

## கிறிஸ்தசமய பாடசாலைகளும் சிங்கள அரசாங்கமும்

சென்ற புதன்கிழமை முடிவுற்ற அரசாங்க சபையிற் கல்வித் திருத்த விஷயம் கொண்டுவரப்பட்டுத் தீர்மானமாயிற்று. கல்வித் திருத்த விஷயங்களில், கெடுபிடியுஞ் செய்யப்பட்டுவந்த வகையாகக் கிறிஸ்த சமய பாடசாலைகளுக்கு விரோத வைராக்கியமாகவே விஷயங்கள் தர்க்கிக்கப்பட்டன. ஆனாலும் கிறிஸ்தசமய பாடசாலைகள் இருக்கலாமென்னும் எண்ணம் மேற்கொண்டு அப்படியே தீர்மானிக்கப்படலாயிற்று. மறுபடி கிறிஸ்து சமய பாடசாலைகளில் அச்சமயத்தைச்சேர்ந்த பிள்ளைகளுக்குத்தான் உதவி நன்கொடைப் பணம் அரசாட்சியார் கொடுக்கவேண்டும், என்னுந் திருத்தப் பிரேரணை ஒப்புக்கொள்ளப்படவில்லை. இனிமேல் கிறிஸ்த சமய பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு அரசாட்சியாரால் ஒப்புக்கொள்ளப்பட்டு, உதவி நன்கொடை பெறவேண்டுமானால், இரண்டொரு நிபந்தனைக்குட்பட்டே அப்படிச் செய்யலாம்.

1. ஒரு புதுப்பள்ளிக்கூடம் ஸ்தாபிக்க விரும்பினால் அப்பள்ளிக்கூடத்துக்கு 30 கிறிஸ்த பிள்ளைகளுக்குக் குறையாமல் இருக்கவேண்டும்.

2. மேற்குறித்த பிள்ளைகளின் பெற்றோர் பள்ளிக்கூடத்திலிருந்து ஆண்பிள்ளைகளானால் இரண்டுமைல் சுற்றளவெல்லைக்குள்ளும், பெண்பிள்ளைகளானால் ஒருமைல் சுற்றளவான எல்லைக்குள்ளும் இருக்கவேண்டும் என்பதும் தீர்மானம். ஆனால் இப்பிரமாணம் புதுப் பள்ளிக்கூடங்களுக்கோ, அல்லது இப்போதிருக்கும் பள்ளிக்கூடங்களுக்கோ எனபது தெளிவாயிருக்கவில்லை.

கிட்டத்தட்ட எண்பது அல்லது அதற்கு மேற்பட்ட காலங்களாக அரசாட்சியார் ஊரவர்களுக்குக் கல்விக்குரிய வசதிகள் உண்டாக்காமலிருந்தபோது, மேலைத் தேயங்களிலிருந்து மிஷனரிமார் இவ்விடம் வந்து சனங்களுக்குக் கல்வியையும், சாதாரண கல்வியை மாத்திரமல்ல, உயர்தரக் கல்வியையும், கொடுத்தனர். அவர்கள் கொடுத்தகல்வியின் பேறுகச் சீர்திருத்தம், நாகரிகம், உத்தியோகம் மாபெனுயர்ச்சி முதலிய நன்மைகள் உண்டாயின வென்பதை எவர்தான் மறுக்க முடியும். தமிழருக்குள் தற்காலம் உயர் பதவியில், மேனிலையில், உள்ள எந்தக் குடும்பம் மிஷனெரிமாரின் கல்வியினாலாமல் மேனிலைக்கு வந்திருக்கிறார்களென ஆழ்ந்து ஆராய்ந்தால், மேனிலையிலிருப்பவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதின்மரும் கிறிஸ்த கலாசாலையிற் கற்றுத் தேறியே இந்நிலையையடைந்தார்களென்பது பிரத்தியட்சம்.

மேலும், மேற்படி மிஷன் பாடசாலைகளிலே சாதாரண கல்வியுடன் சமயசன்மார்க்க கல்வியுங் கொடுக்கப்பட்டதினால் தர்ம நெறியையுங் கற்றுக்கொண்டு, அதன்படி யோக்கிய நிலையில் வந்தெய்தினர் எத்தனையனந்தம். இவை யெல்லாவற்றையு மநுபவித்தும் அறிந்தும் இவர்களெல்லோரும் வாய்பொத்தி மௌனஞ் சாதிப்பது [illegible] நன்றன்று.

## இந்திய கிறிஸ்தவர்களும் அவர்கள் உரிமைகளும்

[ நாக்பூரிலேயுள்ள வாலிப சங்க மண்டபத்திலே நடந்தவோர் கூட்டத்தில் ஸ்ரீ. இராஜகோபாலாச்சாரியரின் உபந்நியாசம். ]

500க்கு மேற்பட்ட கிறிஸ்தவர்கள் கூடியிருந்த கூட்டத்தில் இராஜாஜி அவர்களைப் பார்த்து: கிறிஸ்தவர்களாகிய நீங்கள் இந்தியாவிற் செய்து முடிக்கவேண்டியவோர் பாகமுண்டு. அது உங்களுக்குப் புகழைக் கொண்டுவரும். ஏனெனில், எங்களுக்குள் நிகழும் வித்தியாசங்களையுஞ் சண்டை சச்சரவுகளையும் மத்தியஸ்தமாய் நடுத்தீர்க்கவேண்டியவர்கள் இந்தியாவிற் சிறுபான்மையாராகிய நீவிர்தான். இப்போவும் எங்கள் ஒவ்வாமைகள் கஷ்ட நிலைக்கு வரும்போது, சனங்கள் உங்களிடம், அல்லது உங்களைப்போற்பட்டவர்களிடம் போவதை நீர் கவனிக்கவில்லையா? நீவிர் எங்கள் நீதிபதிகளாக வரவேண்டியதாக எங்கள் வித்தியாசங்க ளிருக்கின்றன. இந்திய கிறிஸ்தவ குழாம் சுவதேசக் கிளர்ச்சி சம்பந்தமான எல்லா ஆலோசனைச் சமாசங்களிலும், தங்களது பூரணமான ஆதரவைக் கொடுப்பதையும், அவ்விபக்கத்துக்கு மாறுன எதிலும் அவர்கள் சாராதிருப்பதையும் இந்தியாவிற் சுவதேசக் கிளர்ச்சியுலகம் அறியாதிருக்கின்றதா? இக்காரியங்களை யறியாதபடி இந்திய சுவதேசக் கிளர்ச்சிக்காரர் அவ்வளவு நன்றியற்றவர்களா? அவ்வளவு கேவலமானவர்களா? கிறிஸ்தவர்களாகிய நீவிர் இந்தியாவில் நாலுவிடங்களிலுஞ் சிதறியிருக்கின்றீர்கள். இதற்காகக் கடவுளுக்கே ஸ்துதி. ஏனெனில் உங்களது நல்ல செல்வாக்கு எங்கும்பரவுமளவு நின்றுதான், கிறிஸ்துவில் விசுவாசம் நன்றாய் நடபடிக்கைக்குக் கொண்டுவரப்பட்டால், இந்தியாவில் அதன் செல்வாக்கு செல்லாது போகுமென யாருஞ் சொல்லத் துணிவார்களா? இந்துக்களுடைய மனதுக்கும் பொருத்தமான உவமானங்கள் பரிசுத்த வேதாகமத்திலிருந்தும் யேசுநாதருடைய திருவாய்மொழிகளிலிருந்தும் எடுத்தாளப்படுகின்றதல்லவோ? குறித்தவோர் நடக்கை கிறிஸ்தமாதிரி யல்ல (Un-Christian) என்று நான்சொல்லுகிறபோது, அதன் அர்த்தத்தை எந்த இந்துவும் விளங்கிக் கொள்ளுவானல்லவா? "கடவுளுக்கு ஸ்துதி" (Thank God) என நான் சொல்லுகில், அது தற்சம்பவமாய் எனது வாயில் வந்ததென யாராகுதல் சொல்லத் துணிவானா? இந்திய கிறிஸ்தவர்களே! நீங்கள் பிரத்தியேகப்பட்டவோர் கூட்டமாயிருத்தல் கூடிய காரியமன்று. ஆனபடியினாலே சிறுபான்மையினரான இந்திய கிறிஸ்த மக்களுக்கு எந்த விஷயத்திலும் யாதாவது பிணைநிற்க அவசியமில்லை. மற்றச் சனங்கள் அனுபவிக்குஞ் சுதந்திரங்களையும் நீவிர் அனுபவிக்க வேண்டியதே. மற்றவர்களைப்போலக் கல்வி விஷயத்திலும் அதே தருணங்கள் உங்களுக்குங் கொடுக்கப்பட வேண் [illegible] இந்திய அரசாங்கத் [illegible] கிறிஸ்தவர்களுக் கிடமில்லை" யெனச் சொல்லி எவராவது மேவிடமெடுக்க முடியவே முடியாது. கல்வி விஷயத்தில் மற்றெவரைப்போல உங்களுக்கு முரிமையுண்டு. முன்னேற்றமான எந்த அரசாங்கத்திலு மிருப்பதுபோல அரசாட்சி உத்தியோகத்திலும், மற்றெவ்வுரிமையிலும் உங்களுக்கும் பங்குண்டு. மாகாணத்துக்குரிய எங்கள் அரசியலை நாங்கள் 1937ம் ஆண்டு ஆரம்பித்த காலத்தில், சமயத்திலதி ஆர்வமுள்ள சிலர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார்கள். 'இந்தியாவிற் சுயராச்சியம் வருமானல், கிறிஸ்த சமயத்தைப் போதிப்பதி லாகுதல், சனங்கள் மனந் திருப்புதலிலாகுதல் நீங்கள் ஏதேன் தடை செய்ய வருமோ? சுயராச்சியம் கிறிஸ்து சமயம் பரம்புவதற்குச் சாபமாயிருக்குமோ?" அக்கேள்விக்கு நான் சொன்ன பிரதியுத்தரமேதுவெனில்:- "நண்பர்காள், சுவதேச இயக்கத்திலீடுபட்டிருக்கும் இந்துக்கள் சாதாரணசனங்கள். அவர்களிடம் வைராக்கியத்தனங் கிடைக்கவே கிடையாது. கொள்கிறதை எதிர்ப்பவர்கள்தான் பித்தம் பிடித்தவர்கள். (அவர்கள் இந்துமகா சபையார்.) தன் சமயத்தைப் பிரசங்கிக்க எவனுக்கு முரித்துண்டு. சரியான முறையில் அவனப்படிச் செய்யலாம். ஆனால் பிழையான முறையில் சமயத்தைப் புகுத்தல் தகாது. இதைநான் ஏதோ சுயலாபங் கருதிச் சொன்னேனல்ல. மற்றைத் தேயங்களிலுள்ள கிறிஸ்தவர்கள் ஒடுங்கிய மனப்பான்மையுடையாரா யிருக்கலாம்; ஆனால் இந்திய கிறிஸ்தவர்க ளப்படியல்ல. இந்தியாவிலுள்ள கிறிஸ்த குடும்பங்களில் அநுசரிக்கப்படும் கிறிஸ்தவம் மேலைத்தேயத்தி லநுசரிக்கப்பெறும் மார்க்கத்திலும் அதிக உசிதமானதென்பது எனது அபிப்பிராயம். நான் இதை என் கண்கூடாகக் கண்டேன், ஆகையால் சொல்லுகிறேன். இந்திய கிறிஸ்த ஸ்திரீகள் பக்தியிலாழ்ந்தவர்கள். அவர்கள் சமயபக்தியுள்ளவர்கள். அவர்கள் தெய்வ சனங்கள். கடவுளின்மக்க ளிருக்க வேண்டிய மாதிரி யிருக்கின்றனர். மற்றைய தேயத்தி லுள்ளவர்களிலும் இவர்கள் உத்தம கிறிஸ்தவர்கள். இது எனது அபிப்பிராயம். சமயத்தை — அது எதுவாயிருப்பினும் — ஒருவன் சருவ ஆரம்பிக்கில், ஒரு சமயமும் தப்பாது.

(தொடரும்)

## உடுவிற் பழைய மாணவர் கூட்டம்

உடுவிற் பழைய மாணவரின் 24 ம் வருஷாந்த கொண்டாட்டம் ஆனி மாதம் 30 ம் திகதி சனிக்கிழமை உடுவிலில் நடைபெறும். பழைய மாணவர் யாவரும் இந்தத் திகதியைக் கவனித்து, இக்கொண்டாட்டத்திற் பங்கு பெறும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிற்பகல் நடைபெறும் தேநீர், பகிரங்கக் கூட்டம், சங்கீத விழா முதலியவற்றில் பழைய புணவர் (Old Boys) பழைய மாணவிகளின் கணவன்மார், சிநேகிதர் யாவரும் பங்குபெறும்படி அன்பாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தனித்தனி அழைப்புப் பத்திரங்கள் அனுப்பப்படமாட்டாது.

கூட்ட ஒழுங்கு:

| | | |
|---|---|---|
| காலை | 10 மணி. | ஸ்தோத்திர ஆராதனை. |
| காலை | 11 மணி. | பாடசாலையில் நடைபெறும் சில விசேஷ வேலைகள் காட்டப்படும். |
| | 1 மணி. | சாப்பாடு |
| பிற்பகல் | 3 ,, | காரியநிர்வாகக்கூட்டம் |
| | 4.30 ,, | தேநீர் விருந்து |
| | 5.30 ,, | பகிரங்கக் கூட்டம் |
| | 6.30 ,, | சங்கீத விழா. |

R. Suppiah,
(Secy, U. O. G. A.)

23—2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Morning Star

Friday, June 15, 1945.

## DENOMINATIONAL SCHOOLS

The first impression that one got at the end of the debate in the State Council on Educational Reforms was that, after all, existing denominational schools would be allowed to continue unhampered, that is, they could exist under existing rules. But on closer reading and on reports trickling through from interested politicians there seems to be another interpretation, though far-fetched and not intended, possible. The first impression is very often the result of giving to words and phrases their ordinary, natural meanings in their proper context. Dr. Kannangara said that "the Leader of the House was now an expert in the best ministerial style of concealing his thoughts in words." Mr. Senanayake does not seem to be the only Minister who specializes in this art.

Denominational schools have been and are the Minister's pet aversion. His one aim throughout the deliberations of the Special Committee was to sweep out denominational schools and he made no secret of it. If he could not do this by a direct assault he would starve them or asphyxiate them until they were no more. The 'pearl of great price' of which he is very proud now was clearly an after-thought. He did not wade through the eighty-seven meetings of the Committee in search of this priceless pearl. It dropped from Dumbara at the eighty-eighth meeting. But when people come to realize that they must sell all that they have to buy such a pearl, there may not be much jubilation.

This being the background, it behoves us to examine the decisions in regard to denominational schools with more than average circumspection. A number of amendments were proposed to the first recommendation of the Executive Committee.

Mr. Jayawardana's amendment that:

"the system of public education shall be a State system"

was defeated.

Mr. H. W. Amarasuriya's amendment ran thus:

"the system of State schools and Denominational schools shall continue in respect of existing schools provided however it shall be the duty hereafter of the State *exclusively* to establish schools of all types where necessary."

This amendment contained two distinct issues—one in respect of existing schools and the other in respect of new schools. The Speaker, very rightly, put the amendment to the House in two parts and both were carried.

Next came Mr. Ratnayake's amendment:

"Denominational schools shall be subject to the following among other conditions:—

(a) to be recognised, the school shall have at least 30 pupils of school-going age of the same denomination as the controlling body who reside with their parents within a radius from the school of two miles for boys and one mile for girls and children under 8 years of age.

(b) to be registered for grant, the school shall have at least 30 pupils of school-going age of the same denomination as the controlling body who reside with their parents within a radius from the school of two miles for boys and one mile for girls and children under 8 years of age.

(c) to continue to receive assistance from public funds the school shall have at least 30 pupils of school-going age of the same denomination as the controlling body, who reside with their parents within a radius from the school of two miles for boys and one mile for girls and children under 8 years of age."

When Mr. Ratnayake gave notice of this amendment the possibility of Denominations starting new schools had not been removed. He obviosuly intended to nullify or reduce the effect of such an eventuality by this amendment. When, however, Mr. Amarasuriya's amendment was passed in toto, thereby conferring upon the State the *exclusive* duty and privilege of establishing new schools, there was no need and no room to take up Mr. Ratnayake's amendment. Not only was this done but the two amendments were placed in juxtaposition making up one whole resolution and resulting in a number of inconsistencies and contradictions. This reminds us of an ugly monster in Greek mythology which looks a human being in front and a brute behind.

The order of sequence of the several amendments and the wording of Mr. Ratnayake's own amendment amply support the view that it was not the original intention that the requirement in regard to 30 pupils of school-going age of the same denomination as the controlling body should apply to existing schools. But if it was so, what was the need to speak of (a) recognition and (b) registration for grant? (c) alone would have sufficed. Or, are all existing schools to be recognised and registered for grant afresh? This simply cannot be, because such an interpretation would result in the closing down of many denominational schools and run directly counter to the first part of Mr. Amarasuriya's amendment.

Politicians are not satisfied these days with providing two strings to their bows. They wish to have more and bring all of them into action together in the hope that one at least will succeed. But when all succeed the result is confusion and chaos. This is not the first time that such a technique has been tried: When the Soulbury Commission came the following methods were adopted simultaneously:—(a) boycott; (b) making the Ministers' report available; (c) the chief boycotter attending on the Commissioners unofficially; (d) the passage of the Free Lanka Bill through the State Council; and now to crown it all the chief boycotter is proposing to interview the Secretary of States. Any one of these succeeding would give the desired result.

It is admitted that the final voting on the proposals took place amidst noise and confusion and that members did not appear to know what they were voting for. In these circumstances the most sensible thing would have been to accept Mr. Wille's amendment to approve these recommendations "subject to such modifications and adjustments in the application thereof as may be considered by the Executive Committee, when framing the relative code rules, to be just or expedient." But this was not done. We are inclined to think that the State Councillors may regret, in calmer moments, some of the decisions they have made. It is, however, hopeful to note that they will have a chance to rectify mistakes and correct ambiguities when concrete proposals are put forward before them in due course according to the statements of both the Leader of the House and the [illegible]cation.

## MR. C. RAJAGOPALACHARIAR ON INDIAN CHRISTIAN FUTURE

[ Mr. C. Rajagopalachariar addressed recently a meeting of Indian Christians at the Robertson Y. M. C. A., Nagpur. The following summary made from a verbatim report appears in the *Dnanodaya.* ]

Addressing the Indian Christians present, Mr. C. Rajagopalachariar who was the Congress Prime Minister in the Government of Madras from June 1937 to September 1939, stated: "You have a role to play which will bring glory to you. For it is the minority in India that will act as arbitrator over our quarrels. Don't you see even now that when our quarrels come to a head, people come to you or to people like you? Our differences are such that you have become our judges. Does not the Nationalist world in India know that the Indian Christian community has distinguished itself at every Conference by giving the fullest support to the Nationalist Movement and by never giving support to anti-nationalist trends? Do you think the Nationalist people are so ungrateful, such wretched people, that they won't remember these things? You are scattered all over. Thank God for this because your good influence will spread everywhere. Does any one mean to say that the Christian faith practised properly has no influence in India? Why the very figures of speech that appeal even to Hindus are taken from the Bible and from the life of Christ, so that if I were to say any conduct is 'un-Christian,' every Hindu would understand it. So it is not a slip of my tongue when I say, 'Thank God,' nor is it a mere politic or complementary expression. You Indian Christians therefore cannot remain separate. Then what is it that we have to guarantee about the Indian Christian minorities? It is that you must have the rights and privileges that other people enjoy; you must have the same opportunities for education as others; no other community must get the upper hand in the Government of India by saying, 'No scope for Indian Christians,' I agree that you must have the same opportunities as anybody else for education, for employment and for every individual civic right that may be conceded in civilised government.

*The Revolutionary Urge of Christians*

You are the product of a revolutionary urge. You have given up one religion and taken a new religion. As soon as people become Indian Christians, they go to school. In many places in India whole villages are converted, and they cease at once to be called the 'depressed classes.' Therefore I say that if your fear is about education, there is no room for apprehension. You will have all the opportunities which every body else has and a little more besides. Take the public services; Indian Christians have more than 'a weightage.' I am only trying to answer any apprehensions you may have. By reason of your new faith, you will not suffer any handicap in regard to education, the services, or property.

*Preaching and Conversion*

The persons interested in religion as such have put to me the question: 'Will a National Government in India put handicaps upon the preaching of Christianity and the conversion of people?' 'When we began in 1937 to take the Provincial Governments into our own hands, many good friends of mine were putting to me this question, mostly European members of the Churches: 'Do you think that the National Government will allow the spread of the Christian religion'? My dear friends, our Nationalists are very poor Hindus. They have not much fanaticism about them. It is only those who are opposed to the Congress who are fanatical. Everybody will be free to preach his faith; that is, everybody will be free to preach his faith fairly and properly. You do not preach it through bribery and corruption or kindapping and abduction. This is not a promise I have forged in order to get your political alliance. Christians in other countries may be narrowminded, but Indian Christians are not. The Christianity that is practised in the Christian homes of India is to my mind a better form of Christianity than that practised in the West. I have seen this with my own eyes and therefore I can say this. Indian Christian women are very devout people; they are truly religious; they are very good Christians; they are good people of God; and good to one another as children of God should be. They are I think better Christians than Christians of other countries. That is my opinion. If, meanwhile, we allow assaults on any religion, then all religion will go to pieces.

*Indian Christian Fears*

Finally, we come to the real thing. You ask: What rights will you give us as a community and what share will you give us in the Government of the country? There is no need for apprehension in this matter, for your share is guaranteed according to your numbers. Your value will in no way be depreciated. Nobody will disenfranchise you. Have you not seen with your own eyes in the villages, that the untouchables are not allowed to take water from the village well, but that the moment they are converted to Christ they can use the well of the village? I am not pleading that it is logical, but as soon as a Harijan becomes a Christian he is entitled by the social law to take the water from the villag e well."

(*To be continued*)

HOUSE FOR SALE

Spacious house and compound in most central residential Town area. Apply: Proctor Tissevarasinghe, Jaffna, or occupant Proctor Niles, First Cross Street, Jaffna.

22—2.

PIANO TUNING

MR. A. R. EPHRAUMS

Graduate of the Royal Normal College and Academy of Music, London Holder of Diploma in Piano Tuning

WILL BE IN THIS DISTRICT FROM JUNE 12TH TO JUNE 30TH

and will be available for Piano Tuning and Repairing.

Reports and estimates for repairs, etc., given free.

Certified by seven of the leading Manufacturers of Pianos:

Marchall & Sons, Ltd.
Collard & Collard, Ltd.
J. B. Crammer & Co., Ltd.
The Chappell Piano Co., Ltd.
John Broadwood & Sons, Ltd.
C. H. Challen & Sons, Ltd.
The Aeolian Co., Ltd.

Charges for Tuning:—
Rs. 12.50 for an occasional Tuning.
Rs. 10.00 for a regular quarterly Tuning.

Apply to:
c/o Miss R. M. Reineker,
64, Station Road, Jaffna.

Printed and published for the American Ceylon Mission by Mr. V. Joseph Arianayagam residing at Tellippalai at the American Ceylon Mission Press, Tellippalai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org